
# 12 திருமுழுக்கும் உறுதிப்பூசுதலும்




12.1 இயேசுவின் திருமுழுக்கு

ஓர் குழந்தையின் திருமுழுக்கு

## திருமுழுக்கு

இறையாட்சிக்கு உட்படத் திருமுழுக்குப் பெற வேண்டும் என்று இயேசு நிக்கதேமு என்பவருக்குக் கூறியதிலிருந்து உறுதிப்படுத்தப்படுகிறது.

''ஒருவர் தண்ணீராலும் தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது என்று மிக உறுதியாக உமக்குச் சொல்லுகிறேன்.''

(யோவான் 3.5)

இவ்வாறு கற்பித்த இயேசு விண்ணேற்பு அடையும் முன் தமது திருத் தூதர்களுக்குக் கட்டளையிட்டுக் கூறியது: எல்லா இனத்தாரையும் சீடராக்கி அவர்களுக்கு திருமுழுக்குக் கொடுக்கும் படியாகும்.

"நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்; தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன் "

(மத்தேயு 28.19-20)

**திரு முழுக்கு அருள் அடையாளம் வழங்கும் இறை அருள்**

- சென்ம பாவத்திலிருந்து கழுவப்படுதல் கன்ம பாவத்திலிருந்து விடுவிக்கப்படுதல்.
- இறைவனின் பிள்ளையாதல்
- மூவொரு கடவுள் வாழும் இல்லமாதல்.
- ஆன்மாவில் அழியாத முத்திரை ஒன்று பதிக்கப்படல்
- இறை அரசின் உரிமையாளராதல்
- மற்றைய அருளடையாளங்களைப் பெறுவதற்கான தகுதி பெறுதல்
- குருத்துவ மேய்ப்பு இறைவாக்குப் பணியில் ஈடுபடல்.
- கிறிஸ்துவின் மறை உடலின் உறுப்புக்களாதல்
- திருச்சபையில் அங்கத்தவராதல்

திருமுழுக்கின் மூலமாக நீங்கள் தூய ஆவியின் ஆலயங்கள் ஆனீர்கள். கனமான பாவம் புரிந்து அந்த மாபெரும் உத்தமரை உங்கள் ஆன்மாவிலிருந்து அகற்றி விடாதீர்கள்.

(தூய திருத்தந்தை பெரிய லியோ)

## ஞானப் பெற்றோராவதற்கு இருக்க வேண்டிய தகுதிகள்

※ புகுமுக அருளடையாளங்களை பெற்றிருத்தல் (திருமுழுக்கு, உறுதிப் பூசுதல், நற்கருணை)

※ 16 வயதைப் பூர்த்தி செய்தவராக இருத்தல்.

※ தனது கிறிஸ்தவ நம்பிக்கையை வாழுபவராகவும், தனது கிறிஸ்தவ கடமைகளையும் பொறுப்புக்களையும் பற்றிய அறிவு உடையவராகவும் இருத்தல்.

※ திருச்சபையின் சட்டத்திட்டங்களினால் விலக்கிவைக்கப்படாதவராய் இருத்தல்.

※ குழந்தையின் பெற்றோரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாயிருத்தல்.

※ அவர்களுக்குரிய கடமைகளைப் பொறுப்புக்களை நிறைவேற்ற விருப்புடையோரா யிருத்தல், அதற்கான ஆற்றல் உடையவர்களாயிருத்தல்.

※ பிள்ளையின் பெற்றோர் அல்லாது இருத்தல்.

## திருமுழுக்கில் பயன்படுத்தப்படும் அடையாளங்களும் அவற்றின் அர்த்தங்களும்

தண்ணீர் : ''தண்ணீர் திருமுழுக்கில் முக்கியமானதும் கட்டாயமானதுமான அடையாளமாகும்.

உலகைப் படைக்கும் போது தண்ணீர் பங்கு கொள்ளுகிறது. உலக ஆரம்பத்தில் நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது'' (தொ.நூ 1:2) இயேசு திருமுழுக்குப் பெற்ற போது அவர் மீது பரிசுத்த ஆவி இறங்கி வந்தது.

வெண்ணிற ஆடை : வெள்ளை நிறம் தூய்மையின் அடையாளமாகும். வெள்ளை ஆடையைக் குழந்தையின் மேல் வைத்தலால் அல்லது அணிதலால் குழந்தை பெறும் ஆன்மீகத் தூய்மை அடையாளப்படுத்தப்படுகிறது. பாவம் புரியுமுன் அருள் வாழ்வில் இருந்த மனிதன் பாவத்திற்கு பின் இறை அருள் வாழ்வை இழந்து விட்டான். திருமுழுக்கின் போது அணியப்படும் வெள்ளை ஆடையின் மூலம், மீண்டும் அருள் வாழ்விற்கு உயர்த்தப்படுவது அடையாளப்படுத்தப்ப டுகிறது. இயேசு தோற்றம் மாறிய போது அவர் அணிந்திருந்த வெண்மையான ஆடையையும் இது அடையாளப்படுத்துகிறது.

உயிர்த்த கிறஸ்துவின் ஆடையினதும் அடையாளமாகவும் இது இருக்கின்றது. திருமுழுக்கின் மூலம் நாம் உயிர்த்த கிறிஸ்துவின் மகிமையில் பங்கு பெறுகிறோம்.

திருத்தைலம் பூசுதல் : ''கிறிஸ்மா'' (Chrism) என்பது கிறிஸ்துவின் பெயரால் அர்ச்சிக்கப்பட்ட கிறிஸ்மா தைலம் ஆகும். இத் திருத்தைலம் திருமுழுக்கின் போது பூசப்படுகிறது.

திருத்தைலம் பூசுதல் திடப்படுத்தலின் அடையாளமாகும். திருமுழுக்கின் மூலம் ஒரு கிறிஸ்தவனாகத் திடப்படுத்தப்படுவது,

- தனது நம்பிக்கைக்கு ஏற்ப வாழுவதற்கும்,
- தனது நம்பிக்கைக்கு எதிராக எழும் சவால்களை எதிர்த்துப் போராடுவதற்கும் ஆகும்.

திருமுழுக்குப் பெற்ற கிறிஸ்தவன் அரச, குருத்துவ, இறைவாக்குப் பணிகள் வழியாக இறைவனுக்கும், மனிதருக்கும் பணிசெய்வதற்காக அருள் பொழிவு செய்யப்படுகிறான்.

பாஸ்காத்திரி : பாஸ்காத்திரி உயிர்த்த கிறிஸ்துவின் அடையாளமாகும். திருமுழுக்குச் சடங்கின் போது ஏற்றப்படும் பாஸ்கா திரியின் ஒளியானது குழந்தையின் ஆன்மாவிற்கு கிடைக்கும் உயிர்த்த கிறிஸ்துவின் ஒளியின் அடையாளமாக உள்ளது. கிறிஸ்துவைப் பின் செல்லும் எவரும் இருளில் நடப்பதில்லை என்பதையும், குழந்தை ஒளியின் பிள்ளை என்பதையும், ஒளியில் எப்போதும் வாழ வேண்டும் என்பதையும் அடையாளப்படுத்துகிறது.

## உறுதிப்பூசுதல்




12.2 படம் ஆயர் உறுதிப்பூசுதல் வழங்குதல்

**மீட்பின் வரலாற்றில் உறுதிப்பூசுதல்.**

இயேசுவின் வாழ்விலிருந்து தூய ஆவியின் செயற்பாட்டைப் பிரிக்க முடியாது. அவர் தூய ஆவியினாலேயே கருவானார்.

"யோசேப்பே, தாவீதின் மகனே, உம் மனைவி மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான். "

(மந்தேயு 1:20)

வானதூதர் மரியாளுக்கு இவ்வாறு கூறினார்.

"தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்......."

லூக்கா 1:35

இயேசு திருமுழுக்கு யோவானிடம் யோர்தான் ஆற்றங்கரையில் திருமுழுக்குப் பெற்ற போது தூய ஆவி புறா வடிவில் அவர் மீது இறங்கி வந்தார். அவர் தமது பகிரங்க வாழ்க்கையை ஆரம்பிக்கும் போது இவ்வாறு கூறினார்.

"ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது. ஏனெனில் அவர் எனக்கு அருள்பொழிவு செய்தள்ளார். .......... "

லூக்கா 4:18

தூய ஆவி திருத்தூதர்கள் மேல் வரும் போது அவர்கள் எவ்வாறு செயற்படுவர் என இயேசு, அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார்.

"ஆனால் தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேயிலும், யூதேயா, சமாரியா, முழுதிலும் உலகின் கடைசி எல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள் "

(தி.தூ.ப 1: 8)

## உறுதிப்பூசுதல் பெறத் தேவையான தகுதிகள்

- *திருமுழுக்குப் பெற்றிருத்தல்.*
- *குறிப்பிட்ட வயது (வயது 14 ) நிறைவடைந்திருத்தல்.*
- *அருள் நிலையில் வாழுதல், ( அருள் நிலையில் உறுதிப்பூசுதல் பெற ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற வேண்டும்)*
- *முறையான மறை அறிவைப் பெற்றிருத்தல்.*
- *உறுதிப்பூசுதல் பெற முழு விருப்பம்.*
- *கிறிஸ்துவின் படைவீரனாக ஆயத்தம் செய்தல்.*
- *நம்பிக்கையை வெளிப்படுத்தல் (திருமுழுக்கு வார்த்தைப் பாட்டைப் புதுப்பித்தல்)*
- **உறுதிப்பூசுதல் வழியாகக் கிடைக்கும் கொடைகள்.**
- *உறுதிப்பூசுதல் வழியாக, திருமுழுக்கின் போது நாம் பெற்ற இறை அருள் ஆழமாக்கப்படுகிறது. வளர்ச்சியடைகிறது.*
- *திருச்சபையில் முழுமையான அங்கத்தவம் கிடைக்கின்றது.*
- *இறை பிள்ளைக்குரிய மனப்பான்மையோடு 'அப்பா தந்தாய்' என அழைக்கும் உரிமையை பெறுகிறோம்.*
- *கிறிஸ்து இயேசுவோடு இணைக்கப்படுகிறோம்.*
- *நம்மில் தூய ஆவியின் கொடைகள் மேலும் வளர்ச்சி அடைகிறது.*
- *திருச்சபையோடு உள்ள தொடர்பு, மேலும் நிறை வாழ்விற்கு இட்டுச் செல்கின்றது.*
- *முதிர்ச்சி அடைந்த ஒரு கிறிஸ்தவனாக, கிறிஸ்துவின் சாட்சியாக சொல்லாலும், செயலாலும் நம்பிக்கையைப் பரப்ப தூய ஆவியின் விசேட சக்தி கிடைக்கிறது.*
- *கிறிஸ்துவின் பெயரை அச்சமின்றி வெளிப்படுத்தவும், ஒரு போதும் சிலுவையைப் பற்றி வெட்கத்திற்குள்ளாகாதிருக்கவும் சக்தி கிடைக்கிறது.*

- சமுதாயத்தில் நிலவும் சீர்கெட்ட அனைத்து நடவடிக்கைகளிலிருந்தும் பாது காத்துக் கொள்ளவும், வாழ்க்கையில் எதிர் கொள்ளும் சவால்களின் மத்தியில் உறதியாக இருக்கவும், அச்சவால்களுக்கு அஞ்சாது முகம் கொடுக்கவும் சக்தியும் பலமும் கிடைக்கிறது.

**உறுதிப் பூசுதலை வழங்குபவர்**

உறுதிப் பூசுதலை வழங்கும் தகுதி பெற்ற பணியாளன் ஆக செயற்பட வேண்டியவர் மறை ஆயராவர். வளர்ந்தோருக்கான திரு முழுக்கின் போது குருவானவரால் அச் சடங்கின் போதே உறுதிப் பூசுதலும் வழங்கப்படுகிறது. மரணத்தருவாயில் இருக்கும் கிறிஸ்தவனாக இருப்பின், எந்த ஒரு கத்தோலிக்க குருவானவருக்கும் இந்த அருளடையாளத்தை வழங்க அனுமதி உண்டு.

**செயற்பாடு**

1. பின்வரும் சந்தர்ப்பங்களில் உறுதிப்பூசுதல் பெற்ற நீர் எவ்வாறு செயற்படுவீர் என எழுதுக.

| சந்தர்ப்பம் | பிரதிபதில் |
|---|---|
| 1. நம்பிக்கைக்கு எதிராக பகிரங்க எதிர்ப்புக்கள் ஏற்படும் போது | ................................................ |
| 2. தகாத செயல்களுக்குத் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள முயலும் போது | ................................................ |
| 3. உண்மை பேச வேண்டிய சந்தர்ப்பத்தில் | ................................................ |

2. திரு முழுக்கின்போது பயன்படுத்தப்படும் அடையாளங்களையும் அவற்றின் அர்த்தங்களையும் அட்டவணைப்படுத்துக.
3. உறுதிப் பூசதல் மூலம் கிடைத்த அருட்கொடைகளை வளர்த்துக்கொள்ள நீர் செய்த செயல்கள் மூன்று எழுதுக.

**வாழ்க்கைக்கு**

எனது நம்பிக்கைக்கும், தூய்மைக்கும் எதிராக சவால்கள் வரும் போது, கிறிஸ்துவின் போர் வீரனாக அவற்றை எதிர்த்துப் போர்புரிவேன்.